Enrich, X(II) : 7 - 13, Jan – June, 2019

பரிபாடலில் மகளிர் வாழ்வியல்

சு.பானுமதி, தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
லெ.புவனேஸ்வரி, தமிழ் ஆய்வியல் நிறைஞர்
தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

முன்னுரை

தமிழர் பண்பாடு உலக அரங்கில் தலை சிறந்தது. தமிழ்ச் சமூகம் கடைப்பிடித்த வாழ்வியல் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. இச்சமூகத்தின் வாழ்க்கை முறை பல்வேறு இலக்கண வரையறைகளுக்கு உட்பட்டது என்பதில் ஐயமில்லை. மகளிரின் அகவாழ்வியல் முறைகள், விளையாட்டுகள், வழிபாட்டில் வேண்டுதல்கள், ஒப்பனைகள் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் விரவிக் காணப்படுகின்றன. அவற்றுள் பரிபாடலில் காணலாகும் மகளிர் வாழ்வியல் குறித்த செய்திகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

வாழ்வியல் விளக்கம்

வாழ்க்கையே மானுட சமுதாயத்தின் அடிப்படை. பிறப்பு முதல் இறப்பு வரை உயிரியல், உளவியல் சார்ந்த தொடர்புகளை ஏற்படுத்தித் தருவது வாழ்க்கையாகும். வாழ்வியல் என்பது ஒரு தனிமனிதனின் அல்லது குடும்பத்தின் அல்லது சமுதாயத்தின் வாழ்க்கையை முழுமையாக உள்ளடக்கியதாகும். எனவே ஒரு சமூகப் பிரிவின் பண்பாடு, சமயம், அரசியல், நடைமுறைச் சடங்குகள் முதலான அனைத்தும் வாழ்வியலுள் அடங்கும். பரிபாடலிலும் மகளிரின் வாழ்வியல் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

களவு வாழ்வில் மகளிர்

அகத்திணை மரபில் நிகழும் களவு ஒழுக்கமானது இரண்டு திங்கள் மட்டும் நடைபெறும்,

“களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப” (தொல்.நூ.எ.32)

என்பது மரபு. இக்களவு முறை இயற்கை புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம் என்று நான்கு வழிகளில் நடைபெறும் என்கிறது தொல்காப்பியம் (நூ.எ.487)

களவின் சிறப்பு

காதலையும், வீரத்தையும் இரு கண்களாய்ப் போற்றியது தமிழ்ச் சமூகம். இத்தகு காதலுக்கு உயிர் போன்றது களவு. அகத்திணை ஒழுக்கத்தில் மிகவும் விறுவிறுப்பானது ‘களவியல்’ பகுதியாகும். இதனைப் பரிபாடலில்,

“காதற் காமம் காமத்துச் சிறந்தது
விடுப்போர் ஒத்தது மெய்யுறு புணர்ச்சி” (பரிபாடல்-9:9, 10)

என நல்லந்துவனார் வெளிப்படுத்துகின்றார்.

தலைவன், தலைவி இருவரும் தம்முள் மனமொன்றிப் பெறும் மெய்யுறு புணர்ச்சியே காதற்காமம் ஆகும். இத்தகு காதல் வாழ்வின் இன்பநிலையைப் பரிபாடலில்,

“காதல் மூதூர்மதி கம்பலைத் தின்று
வடுவகிர் வென்றகண் மாந்தளிர்மேனி

நெடுமென் பணைத்தோள் குறுந்தொடி மகளிர்

ஆராக் காமம் ஆர்பொழிற் பாயல்

வரையகத்து இயக்கும் வரையா நுகர்ச்சி" (பரிபாடல்.8: 37-41)

என்ற இவ்வரிகள் மென்மையான தோள்களை உடைய காதல் மகளிர் தங்களுடைய காதலர்களைச் சந்தித்து காம இன்பத்தை நுகர்வதற்குரிய இடமாகத் திருப்பரங்குன்றம் விளங்குவதை உணர்த்துகின்றது. இதன் மூலம் களவு வாழ்க்கையின் பண்பு வெளிப்படுகின்றது.

கற்பு வாழ்வில் மகளிர்

தலைவியை அவளது பெற்றோர் வதுவைச் சடங்கோடு மணம் செய்து கொடுப்ப, தலைவன் அவளை மணம் செய்து கொண்டு வாழ்தல் கற்பு எனப்படுகிறது.

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற்கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல்.1088)

என்று கூறுகிறார் தொல்காப்பியர். களவு நெறி திருமணத்தால் கற்பு நெறியாக முடிவதே நன்னெறி ஆகும்.

கற்பில் களிப்பு

திருமணம் செய்து கொண்டு தம் கணவரோடு வாழும் மகளிர் தம் கணவர் மார்பகத்தினை என்றும் பிரியாமல் தன் துணை பிரியாத அன்றில் பறவையைப் போன்று கற்பில் இன்பநுகர்ச்சியுடன் இருப்பர் என்பதை,

"அடியோர் மைந்தர் அகலத்து அகலா

அலர் தருமல் மகளிர் நன்னாப் புணர்ச்சி" (பரிபாடல்.8:43, 44)

பரிபாடலால் அறியலாம். இவ்வுண்மையை,

"பூவிடைப் படினும் யாண்டும் கழிந்தன்ன

நீரூறை மகன்றிற் புணர்ச்சி" (குறு.57)

என்னும் குறுந்தொகை பாடலும் வலியுறுத்துகின்றது.

ஊடலில் மகளிர்

ஒருவனும் ஒருத்தியும் மனமொத்து வாழும் காதல் வாழ்வில் 'ஊடல்' சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. காதல் வாழ்வில் கனிவினை ஊட்டுவது ஊடல். ஊடல் இல்லாக் காதல் வாழ்வு 'உப்பில்லாப் பண்டம்' என்று கருதப்படுகிறது.

தேவமகளிர் ஊடல்

முருகனை முன்னிறுத்தி தேவசேனை, வள்ளி இருவருக்குமிடையே ஊடல் நிகழ்கின்றது.

"இறுக இறுக யாத்துப் புடைப்ப

ஒருவர் பயில் ஒருவர் ஒண்மயிலோடு

.....

.....

வெறிகொண்டான் குன்றத்து வண்டு" (பரிபாடல்.9:40-44)

இவ்வரிகள் முருகனுக்காகத் தேவசேனையும், வள்ளியும் சண்டையிடுவதோடு அவ்விருவரின் மயில்கள், கிளிகள், வண்டுகளும் சண்டையிடுவதாகக் கூறுகின்றது.

தலைவி ஊடல்

தலைவி தலைவனுடன் பொருள் பிரிவின் காரணமாகவோ அல்லது பரத்தைப் பிரிவின் காரணமாகவோ ஊடல் கொள்வாள். தலைவன் அழகிய மயிலைத் தன்னுடைய உள்ளத்தில் கருதி நோக்குகிறான். தலைவன் நோக்குவதை அறிந்த தலைவி தலைவனிடம் என்னை நோக்காமல், மயிலை நோக்குகிறாய் என்று ஊடல் கொள்கிறாள். தலைவன் அவளிடம் உன் சாயலை மயில் பெற்றிருக்கிறது என்று கூறி அவளது ஊடலை உணர்ப்பித்தான்.

இதனைப் பரிபாடலில்,

"ஒள்ளொளி மணிப்பொறி ஆல்மஞ்ஞை நோக்கித்தன்
உள்ளத்து நினைப்பானைக் கண்டனள் திருநுதலம்
உள்ளிய துணர்ந்தே ன.ஃ.து உரையாகி நீஎம்மை" (பரிபாடல்.18:7-9)

என்ற இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

பரத்தை ஊடல்

தலைவன் தனக்கே உரிய தலைவியுடனோ, பரத்தையுடனோ, காதற்பரத்தையுடனோ நீராடுதல் மரபு. இதனை ஐங்குறுநூற்றில்,

"சூதார் குறுந்தொடிச்சூர் அமைநுடங்கத்து
நீன் வெள்காதலி தழீஇ நெருறை
.....
.....
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே" (ஐங்.54)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தலைவன் பரத்தையோடு புனலாடியதை அறிந்த தலைவி சினம் கொள்கின்றாள் என்று குறிப்பிடுகின்றது.

பரிபாடலில் தலைவனுடன் பரத்தை ஊடல் கொள்கின்றாள். இதனை,

"பணிப ஒசி பண்ப! பண்டெல்லாம் நனி உருவத்து
என்னோ துவள் கண்டீ?
செய்ததும் வாயாளோ செப்பு" (பரிபாடல்.6:63-67)

என்ற பாடல் வரிகள் மூலம் தலைவன் இற்பரத்தையுடன் சென்று புதுப்புனல் ஆடி மகிழ்ந்ததை அறிந்த காதற்பரத்தை ஊடல் கொள்கிறாள். தலைவன் அவள் ஊடலை நீக்கிப் புனலாடினான் என்றுரைக்கின்றது.

மகளிர் ஒப்பனை

நீராடச் செல்லும் மகளிர் பலவகையான ஆடை, அணிகலன்கள், நறுமணப் பொருட்கள் போன்றவற்றால் தங்களை ஒப்பனை செய்து கொண்டனர்.

ஆடை வகைகள்

வையையில் நீராடச் சென்ற மகளிர் நீராடும் போது வேறு ஆடைகளையும், நீராடியபின் வேறு ஆடைகளையும் அணிந்திருந்தனர்.

நீராடும் போது நீராடலுக்கு ஏற்ற 'புட்டகமும் ஈரணியும்' அணிந்திருந்தனர். நீராடிய பிறகு நுண்ணிய மெல்லிய நூலால் செய்யப்பட்ட 'தாளிதம்' என்னும் பெயருடைய ஆடையினை அணிந்தனர்.

"தாளித நொய்ந்நூல் சீரணத்தர்" (பரிபாடல்.10:10)

நீராடுவதற்குப் பொருத்தமான புடவையை உடுத்தி இருந்தனர்.

அணிகலன்கள்

மின்னல் போல ஒளி வீசக்கூடிய பலவகையான அணிகலன்களை அணிந்து கொண்டனர்.

உடலணி

மேகலை என்னும் ஆபரணமானது நன்றாக இறுகும்படி அதன் தாளைப் பூட்டினர்

"..... மேகலை

ஏணிபடுகாலை இநுகிறுகத் தாள் இடீஇ" (பரிபாடல்.10:10, 11)

பூமாலைகள்

"பெண்கள் காதில் தளிரைச் செருகி இருந்தனர்" (பரி 11:96-105)

பலவிதமான பூக்களால் தொடுத்த மாலையினைத் தலையில் அணிந்திருந்தனர்.

தலையில் மட்டுமின்றிப் பூக்களை அணிகலன்களாகவும் நீராடலின் போது மகளிர் அணிந்திருக்கின்றனர்.

தைந்நீராடும் போது கன்னிப் பெண்கள் நீலமலரினைக்காதில் செருகுதல்

அசோகந் தளிரைக் காதில் செருகுதல்

நெற்றியில் குங்குமம் இடுதல்

குவளை மலரின் பசுமையானத் தண்டினை வளையல்களாக செய்து அணிந்து கொள்ளல்.

நெய்தல், குவளை, மல்லிகை மலரை மாலையாக அணிதல் போன்ற செயல்களை மேற்கொண்டனர்.

"பாய்குழை நீலம் பகலாகத் ததையினாள்

குவளை குழைக்காதின் கோலச் செவியின்

.....

.....

மல்லிகா மாலை வளாய்" (பரிபாடல்.11:96-105)

இவ்வாறு வையையில் நீர்வரத்து அதிகரித்துப் புதுப்புனல் வரும் வேளையில் அங்குள்ள பெண்கள் தங்களின் அழகை மிகைப்படுத்தும் நோக்கோடு பலவகையான மலர்களைக் கொய்து சூடிக் கொண்டனர் என்பதை அறியலாம்.

- இருபக்கமும் கோக்குவாய் உள்ள சங்கிலியை அணிந்திருந்தனர்.
- இரட்டை வளையல், தோள் வளையல், காலில் அணியும் கட்டுவடத்துடன் கூடிய கழல் போன்ற அணிகளையும் அணிந்திருந்தனர்.
- ஆழகான முன்கையில் வளையல்கள் அணிந்திருக்கின்றனர். அது நெருப்பிலிட்டுச் சுட்டமையால் பொன்னொளி உடையதாக விளங்குகிறது.

இதனைத் திருமுருகாற்றுப்படையில்,

"சுடக்சுடரும் பொன்போல் ஒளிவிடும்" (தி.மு.ப.85)

என்ற வரி புலப்படுத்துகிறது.

- அழகிய வேலைப்பாடமைந்த தோட்டினை காதில் அணிந்திருந்தனர்.
- மைந்தர்கள் கையில் மோதிரங்களும், தோளில் வளையமும் அணிந்திருக்கின்றனர்.
- கட்டப்பட்ட கோக்குவாயினை உடைய வடங்கள் அணிந்தனர்.

"மின்அவிர் ஒளிஇழை வேயுமாரும்

பொன்அடாப் பூம்புனை திருத்துவோரும்" (பரிபாடல்.12:11, 12)

இவ்வாறான அணிகளை உடலில் அணிந்திருந்தனர்.

தலையணி

பெண்கள் நெற்றிசுட்டி அணிந்திருந்தனர். தலையில் தலைப்பாளை அணிந்திருந்தனர். பெரிய வளையங்களும் அணிந்திருந்தனர்.

"சூட்டும் கண்ணியும் மோட்டும் வலையமும்" (பரிபாடல்.20:30)

என்று பரிபாடல் உணர்த்துகின்றது.

கூந்தல் அலங்காரம்

மகளிர் கூந்தலை உச்சியில் முடிதல், பக்கத்தில் முடிதல், பின்னிச் செருகல், சுரட்டி முடிதல், சடையாகப் பின்னி விடுதல் என ஐவகையால் ஒப்பனை செய்துள்ளனர்.

மேகம் போன்ற கூந்தலை குழலாக ஒப்பனை செய்தனர். ஒப்பனை செய்யப்பட்ட கூந்தலில் வெட்டிவேர், விலாமிச்சவேர் போன்ற மணம் மிக்க வேர்களுடன் தொடுத்த பலவகையான மலர் மாலைகளைச் சூடிக் கொண்டனர் என்பதை,

"கார்கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்

வேர்பிணி பல்மலர் வேயுமோரும்" (பரிபாடல்.12:15, 16)

எனப் பரிபாடலில் இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

நீர் விளையாட்டு

வையையில் சிறுவர், சிறுமியர், வலியர் மெலியர், இளையர் முதலியர், ஒருமை மகளிர், வரைவின் மகளிர், தோழியர், ஏவலர் முதலியோர் நீராடச் சென்றனர். நீராடலில் தானே நீரில் நீந்தி விளையாடல், தெப்பத்தைக் கொண்டு மிதந்து விளையாடல் போன்ற பலவகையுண்டு.

வையையில் நீராடிய மகளிர் கூட்டத்தில் சிலர் நீரைத் தூவியடிக்கும் சிவிறியிலிருந்து மற்ற மகளிர் மீது நீரைத் தூவி விளையாடினர்.

"புரிந்த தகையினான் யாறுஆடு வாருள்

துரந்த புனல் தூவத் தூமலர்க் கண்கள்" (பரிபாடல்.7:51, 52)

வட்டிலை எறிந்தும், மாலையை சுழற்றி வீசியும் விளையாடினர். பீச்சாங்குழல், கொம்பு, வட்டு, துருத்தி போன்ற விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு விளையாடினர். காதலர்கள் மகிழ்வோடு தாரும், மாலையும் முயங்க புனலாடினர். நீர் விளையாட்டில் ஆடிய மகளிர் இயற்கையாகவே சிவந்த நிறம் உடையவர்கள். அவர்கள் நீரில் மிகுந்த நேரம் நீராடியதால் மேலும் அவர்களது முகங்கள் சிவந்து காணப்பட்டன.

வழிபாட்டில் வேண்டுதல்கள்

- பரிபாடலில் மகளிர் முருகனை நோக்கி, தன்னுடைய கனவில் காதலரைக் கைப்பிடித்து நீராடியது போன்று உண்மையில் நிகழவேண்டும் என்று வேண்டினர்.
- கருவுறாத பெண்கள் கர்ப்பம் அடைய வேண்டும்.
- பொருள் தேடச் சென்ற கணவர் சென்ற காரியம் நிறைவேறிப் பொருளுடன் திரும்பி வரவேண்டும்.
- போருக்குச் சென்ற தலைவன் பகைவரைக் கொன்று வெற்றி பெற்று வரவேண்டும்.

அவ்வாறு நடந்தால் முருகப்பெருமானுக்கு இன்ன இன்ன நேர்த்திக்கடன் செய்வேன் என்றும், அர்ச்சனை செய்வேன் என்றும் எண்ணி வழிபட்டனர் என்பதை,

"கனவின் தொட்டது கை பிழையாகாது
நனவின் சேஎப்ப நின் நளிபுனல் வையை
.....
.....
'ஐ அமர் அருக' என அருச்சிப்போரும்" **(பரிபாடல்.8:103-108)**

பரிபாடலின் இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

தலைவனுக்காக முருகன் அருளை வேண்டி, அவன் திருக்கோயில் மணியினை அடித்து அவன் திருவடிகளில் தலையினை வைத்து நிலம் தோய வீழ்ந்து வணங்கி வேண்டிக் கொண்டாள் தலைவி.

முருகனிடம் மட்டுமின்றி வையையிடமும் வேண்டிய முறையினைக் காணமுடிகின்றது.

- புனலாடுவார் நெஞ்சில் காமம் உண்டாகுக!
- வானம் மழைபொழிந்து வையையில் வெள்ளம் பெருக!
- வையையினால் வயலிடத்துப் பொன் விளைக!
- தைந்நீர் சூடும் தவம் மீண்டும் வாய்க்க!
- வையை உறவு மறுபிறப்பிலும் தொடர்க!
- காதலரைப் பிரியாமல் உடனுறை வாழ்க்கை எய்துக! என்றும் வழிபட்டனர்.
- வையை புது வெள்ளத்தில் பொன்னால் செய்த நத்தை, நண்டு, காலினையுடைய இறால்மீன், வலிமை மிக்க வாளைமீன் ஆகியவற்றை விட்டு நாட்டில் விளைச்சல் பெருக வேண்டும் அதனால் உலகம் வளமுடன் பொலிய வேண்டும் என்று வேண்டியதாக,

"நத்தொடு, நள்ளி, நடைஇரவு, வயவாளை,
வித்தி அலையில் விளைக! பொலிக!" **(பரிபாடல்.10:85, 86)**

என ஆசிரியர் கரும்பிள்ளைப் பூதனார் கூறுகின்றார்.

முடிவுரை

பரிபாடலில் மகளிரின் களவு, கற்பு வாழ்க்கை முறையினையும், அவர்களின் ஒப்பனை முறைகள், ஆடை, அணிகலன்கள், பெண்கள் இறைவனிடமும் வையையிடமும் வேண்டும் முறையினையும், பொழுது போக்கிற்காக நீர் விளையாட்டுகளை விளையாடினார்கள் என்பதையும் அறியலாம்.

துணை நூற் பட்டியல்

மூலநூல்

சாரங்கபாணி.இரா (உ.ஆ) - பரிபாடல்,
கோவிலூர் மடாலயம்,
கோவிலூர் – 630 307.
முதற்பதிப்பு – 2003.

துணைமை நூல்கள்

1. சதாசிவ ஐயர்.தி (உ.ஆ) - ஐங்குறுநூறு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600 113.
முதற்பதிப்பு – 1999.

2. தமிழண்ணல் (உ.ஆ) - தொல்காப்பியம்,
மீனாட்சி புத்தக நிலையம்,
மயூராவளாகம்,மதுரை – 625 001.
ஐந்தாம் பதிப்பு – 2017.

3. பிரேமா. இரா (உ.ஆ) - சங்க இலக்கியம், குறுந்தொகை,
வர்த்தமானன் பதிப்பகம்,
தி.நகர்,சென்னை – 600 017.
முதற்பதிப்பு – 1999.

4. மாணிக்கனார்.அ (உ.ஆ) - பத்துப்பாட்டு, வர்த்தமானன் பதிப்பகம்,
தியாகராயநகர்,சென்னை–600 017.
முதற்பதிப்பு – 1999